முதன்மை சார்பு நீதிமன்றம். விழுப்புரம்.

OS.No. 720/2019

Witness PW2

| | | | |
|---|---|---|---|
| பெயர்; | ராதாகிருஷ்ணன் | மதம் | |
| த.பெ. | துரைசாமி | தொழில்; | |
| ஊர் | வி.சாலை | வயது | 72 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | 21.11.2025 |

(இன்று 21.11.2025) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது. சத்தியமாகச் சொல்கிறேன்.

முதல் விசாரணை

நான் இந்த வழக்கில் 3ம் தரப்பினர் ஆவேன். வாதி தரப்பில் வா.சா.2 ஆக இருந்து எனது முதன்மை பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்தேன். இதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் நிருபண வாக்குமூலத்தை படித்து பார்த்து நன்குபுரிந்து கொண்டு சாட்சியம் அளிக்கிறேன்.

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் 2ம் பிரதிவாதிக்கு 1993ல் வழக்கு சர்வே எண்ணில் 2 செண்ட் 4 எல்லைக்காட்டி கிரையம் செய்து ெகாடுத்தேன் என்றால் நான் கிரையம் செய்து கொடுக்கவில்லை, பிரதிவாதி இந்த வழக்கு சொத்து சம்மந்தமாக போலிசில் புகார் கொடுத்து என்ைன போலிசார் விசாரித்தார்களா என்றால் இல்லை, விழுப்புரம் மாவட்ட குற்றப்பிரிவில் பிரதிவாதி எனக்கு எதிராக கொடுத்த புகாரில் பேரில் குஎண்,29.2019 வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல, அந்த புகார் சம்மந்தமாக போலிசார் என்னையும் எனது மகளையும் அழைத்துவிசாரித்தார்களா என்றால் இல்லை, அந்த விசாரணையில நான் 1993ல் பிரதிவாதி துரைவேலுக்கு 2 செண்ட் கிரையம் கொடுத்ததாகவும் மீதி 12 செண்ட் எனது மகளுக்கு தான செட்டில்மெண்ட கொடுத்ததாகவும் அவரவர் வாங்கிய சொத்தை அவரவர் வசம் வைத்துக்கொள்ள வேண்டியதுஎன்று அந்த குற்ற வழக்கு முடிக்கப்பட்டது என்றால் சரியல்ல, நான் எனது மகளுக்கு எவ்வளவு செண்ட் தானமாக வழக்கு சொத்தில் கொடுத்தேன் என்றால் 15 செண்ட், வழக்கு சொத்தில 12 செண்டு தான் தானம் கொடுத்ததாக பத்திரத்தில உள்ளது என்றால் சரியல்ல, எனது மகள் வழக்கு தாக்ல செய்த பிறகு பிரதிவாதி எதிர்கோரிக்கை தாக்கல் செய்த விவரம் தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை, பிரதிவாதி அவரது எதிா வழக்கில நான் 2 செண்ட் அவருக்கு கிரையம் கொடுத்த விவரத்தை சொல்லியுள்ளார் என்றால் என் மகள் சொன்ன பிறகு தான் அந்த கிரையம் பற்றி எனக்கு தெரியும், அந்த விவரம் தெரிந்தபிறகு பிரதிவாதிக்கு கொடுத்த கிரையம் செல்லாது என்று ஏதாவது நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை, எனது மகளுக்காக நான் பொ ய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல, வழக்கு சர்வே எண்ணில பிரதிவாதிக்கு 1993ல் கிரையம் கொடுத்ததால் தான் எனது மகளுக்கு தானம் கொடுத்த போது வழக்கு சர்வே எண்ணில் 12 செண்ட் மட்டும் தானமாக எழுதியுள்ளேன் என்றால் சரியல்ல, தாவா சொத்து எனது தந்தையாருக்கு பாத்தியமானது அதனை 40 வருடங்களுக்கு முன்பு எங்கள் சகோதரர்க்குள் ஏற்பட்ட பாகப்பிரிவினையில பாகமாக வந்து நான் தொடர்ந்து அனுபவித்து வந்த சொத்தைத்தான் எனது மகளுக்கு தான செட்டில்மெண்டாக கொடுத்தேன், நான் அனுபவித்து வந்ததற்காக ஆவணங்கள் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் அது எனக்கு தெரியாது, எனது மகள் தாக்கல் செய்த தான செட்டில்மெண்ட பத்திரத்திரத்தில் 12 செண்ட தான் உள்ளது என்றால் 15 செண்ட், வழக்கு சர்வே எண்ணில் 12 செண்டுக்கு தான் அனுபவத்திற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல 15 செண்டுக்கு

தாக்கல் செய்துள்ளார், நான் எந்த ஊரில வசித்து வருகிறேன் என்றால் வி சாலையில் வசித்து வருகிறேன், எனது மகள் தேவி எங்கு வசித்து வருகிறார் என்றால் ஜமீன் கூடலூரில் வசித்து வருகிறார், எனது மகளுக்கு எப்போது திருமணம் நடந்தது என்றால் அது எனக்கு தெரியாது, ஜமீன் கூடலூரில எனது மகள் எத்தனை வரு டமாக வசிதது வருகிறார் என்றால் திருமணமான பிறகு 18 வருடமாக வசித்து வருகிறார், எதிர்கோரிக்கையில் கண்ட 2 சென்ட் சொத்து எனது அனுபவத்திலோ எனது மகள் அனுபவத்திலோ இல்லை என்றால் சரியல்ல, எனக்கு பாகமாக வந்த சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியமான து என்றால் எனது தந்தையார் துரைசாமிககு பாத்தியமானது , அவருக்கு பாத்தியமான சொத்தை எவ்வாறு பிரித்துக்கொண்டோம் என்றால் ஊர் பஞ்சாயத்தில பேசி அதனை ஒப்பந்தமாக எழுதி பதிவு செய்துகொண்டோம், அந்த பதிவு ஆவணம் உள்ளதா என்றால் இல்லை, எனது மகள் வாதி பதிவு செய்யப்படாத பாக பத்திரம் மூலமாகத் தான் நான் பிரித்துக்கொண்டதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல, நான் பதிவு செய்யப்படாத பாக பத்திரம் முலம் தான் பிரித்க் கொண்டோம் உண்மையில பதிவு பாக பத்திரம் மூலம் பிரித்துக கொண்டிருந்தால் அது வில்லங்கத்தில காட்டப்பட்டிருக்கும் பொய் என்பதால் தான் வில்லங்க சான்றிதழில எதுவ்ம இல்லை என்றால் சரியல்ல,

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.

Sd/-A.Tamilselvan, M.L.,
Principal Subordinate Judge,
Villupuram

முதன்மை சார்பு நீதிமன்றம். விழுப்புரம்.

OS.No. 720/2019

Witness PW1

பெயர்- தேவி

க/பெ.குமார்

(இன்று 21.11.2025) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது. சத்தியமாகச் சொல்கிறேன்.

சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு முதல் விசாரணை தொர்ச்சி

வாதி தரப்பில் வா.சா.1 ஆக இருந்து ஏற்கனவே எனது முதன்மை பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன். தற்போது எனது கூடுதல் முதன்ைம சாட்சிய பிரமாணப்பத்திரிக்கை தாக்கல் செய்கிறேன் அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் நிருபண வாக்குமூலத்தை படித்து பார்த்து நன்குபுரிந்து கொண்டு சாட்சியம் அளிக்கிறேன். 19.1.1990 தேதியில் எனது தகப்பனார் ராதாகிருஷ்ணன் என்பவரும் அவருடைய உடன் பிறந்தசகோதரும் சேர்ந்து எழுதிக்கொண்ட பாகப்பத்திரத்தின் அசல் தாக்கல் செய்கிறேன் அதனை சான்றாவணமாக ஏற்க வேண்டுகிறேன்.

19.1.1990 தேதியிட்ட பாக பத்திரமானது பதிவு செய்யப்படவில்லை என்பதால் அதனை சாட்சியமாக ஏற்க இயலாது

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் எனது தந்தை தானசெட்டில்ெமன்ட் பத்திரம் எழுதுவதற்கு முன்பு சொத்தின் வில்லங்கம் பார்த்தேனா என்றால் பார்த்தேன், வழக்கு சொத்தின் சரவே எண்,167.3டி, தற்போது என்னிடம் காட்டப்படும் வில்லங்கச் சான்றிதழ் சர்வே எண்,167.3டிக்கு சம்மந்தப்பட்டது என்றால் நான் படிக்கவில்லை என்பதால் அது எனக்கு தெரியாது, 1993ம் ஆண்டு நான் இளவராக இருந்தபோது எனது தந்தையார் தனக்காகவ்மஇ இளரான எனக்காகவும் பாதுகாவலராக இருந்து 2 சென்ட கிரையம் ஏற்படுத்தி கொடுத்ததாக விலலங்க்ம் காட்டப்பட்டுள்ளது என்றால் அது எனக்கு தெரியாது, அந்த வில்லங்க சான்றிதழில 4 எல்லையில என் இருப்பு புஞ்சைக்கு கிழக்கு என்று குறிப்பிடுள்ளது என்றால் அது எனக்கு தெரியாது, அநத வில்லங்க சான்றிதழில எனக்கு கொடுத்த தான செட்டில் மெனட் 16,9,2008ல் வில்லங்கம் காட்டப்ப்ட்டுள்ளது என்றால் சரிதான், வா,சா,ஆ 1 தானசெட்டில்மென்ட் எனது தந்ைதயார் எனக்கு எழுதிக்கொடுத்தது என்றால் சரிதான், வா,சா,ஆ1 தானசெட்டில்மென்ட் பத்திரத்தில் வழக்கு சொத்து சர்வே எண்,167.3டி கூயில 12 சென்டுதான் எனக்கு கொடுக்கப்பட்டது என்றால் சரிதான், எனது தந்தையார் வா,சா,ஆ1 தானசெட்டில்மென்ட் படி வழக்கு சர்வே எண்ணில் எனக்கு தான செட்டில் ஆக கொடுத்தது 12 சென்டு தான் ஆகையால் நான் 15 சென்ட விளம்புகை கேட்பது ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல, ஏற்கனவே எனது தந்தையார் வழக்கு சர்வே எண்ணில் 1993ல் 2 சென்ட் கிரையம் கொடுத்துவிட்டதால் தான் வா,சா,ஆ1ல் எனக்கு வழக்கு சர்வே எண்ணில் 12 சென்ட் கொடுத்துள்ளார் நான் அதனை மறைத்து மிகையாக கேட்கிறேன் என்றால் சரியல்ல, எனது தந்தையார் பிரதிவாதிக்கு கொடுத்த 2 சென்ட் கிரையப் பத்திரம் செல்லாது என பரிகாரம் எதுவ்ம கேட்கவில்லை என்றால் சரிதான், 1993ம் ஆண்டு எனது தந்தையார் பிரதிவாதிக்கு ஏற்படுத்திகொடுத்த பி,த/சா,ஆ1 தற்போதும் அமுலில் உள்ளதால் அதனடிப்படையில் பிரதிவாதி கோரும் எதிர் கோரிக்கைப்படி வழக்கு சர்வே எண்ணில் 4 எல்லைகளில் குறிப்பிட்டுள்ள 2 சென்ட் நிலத்திற்கு பிரதிவாதிககு ஆதரவாக விளம்புகை பரிகாரம் கிடைககத்தக்கது என்றால் சரியல்ல,

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.

Sd/-A.Tamilselvan, M.L.,
Principal Subordinate Judge,
Villupuram